பாடக் குறிப்பு – தினம் ஒரு Mains வினா

Shanmugam IAS Academy · shanmugamiasacademy.in · 99941 46662

குரூப் 2 Mains · அலகு I – நவீன இந்திய வரலாறு (தமிழ்நாடு) · 15 மதிப்பெண் · 250 சொற்கள் · 2026-10-30

சென்னை மாகாணத்தில் சமூக நீதிக்கு நீதிக்கட்சியின் (தென்னிந்திய நல உரிமைச் சங்கம்) பங்களிப்பை மதிப்பிடுக.

Assess the contribution of the Justice Party (South Indian Liberal Federation) to social justice in the Madras Presidency.

1. தோற்றம்

- 20.11.1916 – சுமார் 30 பிராமணரல்லாத தலைவர்கள் (டாக்டர் சி. நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர்) தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தைத் தொடங்கினர்.
- டிசம்பர் 1916 – பிராமணரல்லாதோர் அறிக்கை (Non-Brahmin Manifesto).
- நாளிதழ்கள்: Justice (ஆங்கிலம்), திராவிடன் (தமிழ்), ஆந்திரப் பிரகாசிகா (தெலுங்கு); "Justice" இதழின் பெயரால் நீதிக்கட்சி.
- 1917 – பிராமணரல்லாதோருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கோரி இந்தியச் செயலர் மாண்டேகுவிடம் கோரிக்கை.

2. ஆட்சிக் காலம் (இரட்டையாட்சி)

- 1920 – மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களின் கீழ் முதல் தேர்தல்; காங்கிரஸ் புறக்கணிப்பு; நீதிக்கட்சி வெற்றி; முதல்வர் ஏ. சுப்பராயலு ரெட்டியார்.
- பனகல் அரசர் – முதல் அமைச்சர் 11.07.1921 – 03.12.1926.
- 1920–1923, 1923–1926 ஆட்சி; 1926-இல் சுயராஜ்யக் கட்சியிடம் தோல்வி; 1937-இல் காங்கிரசிடம் பெருந்தோல்வி.

3. சமூக நீதிச் சீர்திருத்தங்கள்

- முதல் வகுப்புவாரி அரசாணை: அ.ஆ. எண் 613, பொதுத் துறை, 16.09.1921 (தமிழ்நாடு ஆவணக் காப்பகம்: "Public Services – Non-Brahmans – Appointment of – Instructions Issued").
- இரண்டாம் அரசாணை: 15.08.1922; மூன்றாம் அரசாணை: 1928 (எஸ். முத்தையா முதலியார் அமைச்சராக இருந்தபோது).
- பணியாளர் தேர்வு வாரியம் – 1924; மெட்ராஸ் சர்வீஸ் கமிஷன் – 1929, மாகாணச் சட்டத்தின் கீழ், இந்தியாவின் முதல் மாகாணப் பணியாளர் தேர்வாணையம்.
- பெண்கள் வாக்குரிமை – 1921 (சட்டமன்றத் தீர்மானம்); டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1926-இல் நியமனம் – இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர்.
- இந்து சமய அறநிலையச் சட்டம் – 1925-இல் நிறைவேற்றம் (பாடநூல்: 1926 சட்டம்); சாதி வேறுபாடின்றி கோயில் குழு உறுப்பினர்.
- காலை உணவுத் திட்டம் – 1920, சென்னை மாநகராட்சிப் பள்ளி, ஆயிரம் விளக்கு.
- ஆந்திரப் பல்கலைக்கழகச் சட்டம் 1925; பல்கலைக்கழகம் 1926.

4. வரம்புகள்

- ஆங்கில அரசுக்கு விசுவாசம்; தன்னாட்சி (Home Rule), ஒத்துழையாமை இயக்கங்களை எதிர்த்தது.
- நிலக்கிழார், மேல்தட்டுத் தலைமை – வரலாற்றாசிரியர்கள் தோல்விக்குக் காரணமாகக் கூறுவது.
- எம்.சி. ராஜா உள்ளிட்ட ஆதிதிராவிடத் தலைவர்கள் விலகல்.
- அரசாணைகள் நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

5. பிற்காலம்

- 1938 – பெரியார் நீதிக்கட்சித் தலைவர் (சிறையில் இருந்தபோது).
- 1944 – சேலம் மாநாடு; அண்ணாவின் தீர்மானங்கள்; நீதிக்கட்சி "திராவிடர் கழகம்" ஆனது.

6. இன்றைய இடஒதுக்கீடு

- State of Madras v. Champakam Dorairajan – 09.04.1951; முதல் திருத்தம் 1951 (18.06.1951 நடைமுறை) – உறுப்பு 15(4).
- தமிழ்நாடு சட்டம் 45/1994 – கல்வி நிறுவனங்கள், அரசுப் பணிகளில் 69% இடஒதுக்கீடு; அரசமைப்பு (76-ஆம் திருத்தம்) சட்டம், 31.08.1994 – ஒன்பதாம் அட்டவணையில் பதிவு எண் 257A.

In English

Key facts

- Origin: 20.11.1916 – about 30 non-Brahmin leaders (Dr C. Natesa Mudaliar, Sir Pitti Theagaraya Chetty, Dr T.M. Nair) formed the South Indian Liberal Federation; Non-Brahmin Manifesto, December 1916. Papers: Justice (English), Dravidan (Tamil), Andhra Prakasika (Telugu). 1917 – demand to Montagu for separate representation of non-Brahmins.
- In office: 1920 – first election under the Montagu-Chelmsford reforms, boycotted by the Congress; Justice won; first Chief Minister A. Subbarayalu Reddiar. Panagal Raja First Minister 11.07.1921 – 03.12.1926. Lost to the Swarajists in 1926; routed by the Congress in 1937.
- Communal G.O.s: G.O. No. 613, Public Department, 16.09.1921 (Tamil Nadu Archives: "Public Services – Non-Brahmans – Appointment of – Instructions Issued"); second G.O. 15.08.1922; third G.O. 1928 (with S. Muthiah Mudaliar as minister).
- Recruitment: Staff Selection Board 1924; Madras Service Commission 1929 under an Act of the Madras legislature – the first provincial Public Service Commission in India.
- Women: franchise resolution 1921; Dr Muthulakshmi Reddy nominated in 1926 – India's first woman legislator.
- Hindu Religious Endowments passed 1925 (textbook: 1926 Act) – temple committees open to anyone irrespective of caste.
- School breakfast: 1920, Madras Corporation school, Thousand Lights. Andhra University Act 1925; university opened 1926.
- Limitations: loyal to the British, opposed Home Rule and Non-Cooperation; elitist, landlord leadership; Adi Dravida leaders such as M.C. Rajah drifted away; G.O.s not fully implemented during Justice rule.
- Later: 1938 – Periyar president (while in jail); 1944 – Salem conference, Anna's resolutions, Justice Party became the Dravidar Kazhagam.
- Today: State of Madras v. Champakam Dorairajan, 09.04.1951 → First Amendment 1951 (in force 18.06.1951) – Article 15(4). Tamil Nadu Act 45 of 1994 – 69% reservation; Constitution (76th Amendment) Act, 31.08.1994 – entry 257A of the Ninth Schedule.

அதிகாரப்பூர்வ ஆதாரங்கள்

- முக்கிய அரசாணைகள் – அ.ஆ. எண் 613, பொதுத் துறை, 16.09.1921 உட்பட (தமிழ்நாடு ஆவணக் காப்பகம் – அதிகாரப்பூர்வ பக்கம்) – https://tamilnaduarchives.tn.gov.in/WEB/EN/RECORDS/IMPGO
- அரசமைப்பு (76-ஆம் திருத்தம்) சட்டம், 1994 – 69% இடஒதுக்கீடு ஒன்பதாம் அட்டவணையில் (தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் – அதிகாரப்பூர்வ PDF) – https://bcc.tn.gov.in/ords/r/wstnbcc/107/files/static/v355/The%20Constitution%20(Seventy-sixth%20Amendment)%20Act,%201994.-2.pdf

---

© Shanmugam IAS Academy, Coimbatore – 2006 முதல். இலவசமாகப் பகிரலாம்; விற்பனைக்கு அல்ல.